# ‘அரசாங்கம் தமிழ்மக்களுக்குகொடுத்தஉரிமைகளை இப்போதுமறுக்கிறதே’

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 264
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 18 ஷஃபான் 22 திங்கட்கிழமை [3-11-69]

தீபாவளி
மலிவு விற்பனை!
உங்கள்
தீபாவளி ஜவுளிகளை
தெரிவுசெய்து விட்டீர்களா?
இன்றேல்
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
குணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடை சந்தி)
208, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# இந்திரா கோஷ்டியினருக்கு நிஜலிங்கப்பா குழு எச்சரிக்கை

## காங்கிரஸ் கமிட்டியை அழைத்திருப்பது சட்டமுரணும்

### கூட்டத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்மீதும் நடவடிக்கை

புதுடில்லி, நவம்பர் 2

அகில பாரத காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை இம்மாதம் நடத்துவதற்கு திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலான குழுவினர் முடிவுசெய்திருப்பதை திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் கூடிய காங்கிரஸ் கட்சிக் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

ரபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் மாநாட்டில் பாரதம் கலந்துகொண்டதையும் அவர்கள் குறை கூறியிருக்கிறார்கள்

பிரதம மந்திரியும் அவரது குழுவினரும் இந்தக்கடைசி நிமிடத்திலாவது கட்சியின் ஒற்றுமைக்காகப்பாடுபட முன்வரவேண்டும் என்று ஒரு தீர்மானத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்

அகிலபாரத காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தை இந்தமாதம் பிற்பகுதியில் நடத்துவதென்று திருமதி இந்திராகாந்தியின் தலைமையில் கூடிய காரியக்கமிட்டி உறுப்பினர்கள்முடிவுசெய்தி

#### எச்சரிக்கை

இந்தமாதம் அழைக்கப்பட்டிருக்கும் கூட்டத்தில் அகிலபாரத காங்கிரஸ்கமிட்டிக்கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது. அப்படிக் கலந்துகொண்டால் கட்சி

திலாவது பிரதமரும் அவரது சகாக்களும் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காங்கிரஸ்கட்சி வகுப்புவா

## சென்னை ரயில் மீது துப்பாக்கியால் சுட்டனர்

சிதம்பரம், நவம். 1

சென்னையில்இருந்துபோன ரயில் மீது சிலர் துப்பாக்கியால் சுட்டார்கள். இதனால் டிரைவர்உட்பட 3 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

திருச்சிக்குச்சென்ற எக்ஸ்பிரஸ்ரயிலில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

ரயில் சாரதி உட்படமூவர் மீது துப்பாக்கிக்குண்டுபாய்ந்தது. சிதம்பரம் ஆஸ்பத்திரியில் மூவரும் அனுபவிக்கப்பட்டனர். தமிழக அமைச்சர் திரு. என். வி. நடராசன், பொலிஸ்சுப்பிரிண்டன் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்துவந்து பார்வையிட்டனர்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற இடத்தில் நரிக்குறவர்கள் வேட்டையாடுவது வழக்கமாம். அப்படி வேட்டையாடும் போது இந்தச்சம்பவம் நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## ‘மாணவர் புத்தகபூச்சிகளாக மட்டும் இருக்கக் கூடாது’

யாழ்ப்பாணம், ஞாயிறு

“தமிழர் வாழ்வும் வளமும் கலையோடு இணைந்தது எந்த நிலையில் பார்த்தாலும் எந்தக் கோணத்தில் சிந்தித்தாலும் தமிழரின் கலையுணர்வை அறியலாம் பாடசாலை மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மட்டும் மாற

தியாலய அதிபர் திரு க. வைத்தியநாதஐயர்வரவேற்புரை நிகழ்த்தினார்

81 பாடசாலைகளிலிருந்து ஆரம்ப தெரிவு நடைபெற்று இறுதிவிழாவில் 24 பாடசாலைகள் கலந்துகொண்டன வெற்றிக்கேடயங்கள், கிண்ணங்கள், தராதரப்பத்திரங்

## தபால்மா அதிகாரிக்கு பண்டிதர் கடிதம்

யாழ்ப்பாணம், திங்கள்

‘இந்தஅரசாங்கமே தமிழ் மக்களுக்குத்தான் கொடுத்த சட்டமூலமான உரிமைகளை மறுப்பதும் புறக்கணிப்பதும் தமிழ் மக்களை அவமதிக்கும் செயலாகும்’ என்று கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தபால்மா அதிகாரி திரு. வேர்ணன் அபயசேகராவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தபால்பதிவு சுட்டுத்துண்டு, கடுகதி சுட்டுத்துண்டு ஆகியனவற்றை தமிழிலும்வெளியிடுமாறுகேட்டு தபால் மா அதிகாரிக்கு கிளிநொச்சி எம். பி. எழுதிய கடிதத்துக்கு, தற்போதுள்ள அச்சுசாதனக்கஷ்டத்தைச்சுட்டிக் காட்டி, சிரமத்தை தபால் மா அதிகாரி கடிதமூலம்தெரிவித்திருந்தார். அக்கடிதத்துக்கு பண்டிதர் இரத்தினம் எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

‘உங்கள் திகதியும் எண்ணும் இல்லாத அரசகரும தமிழ்மொழி பெயர்ப்பு கடித சார்பாக இதனை எழுதிக் கொள்கிறேன் அச்சிடும் வசதி குறித்து நீங்கள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை புறக்கணிப்பது தமிழ் மக்களுக்கு வேதனையையும், வெறுப்பையும்உண்டாக்குகின்றது. இந்நாட்டு மக்களின் சொந்த மொழிகளாகிய சிங்களத்துக்கும் தமிழுக்கும் உரிய இடத்தை கொடுத்த பின்னரே ஆங்கிலத்துக்கு இடம் கொடுப்பது தான் நாட்டு மக்களை மதிக்கும் அரசாங்கத்தின் செயலாக இருக்கும்.

ஆனால், சில அரசாங்க நிறுவனங்கள் சட்ட உரிமை பெறாத ஆங்கிலத்துக்கு கொடுக்கும் இடத்தைத் தானும் சட்டமூலம் உரிமை பெற்ற தமிழுக்குக்கொடுக்க மறுப்பது நீதியும் நியாயமும்ஆகாது. இன்று மக்களுக்காக அரசாங்கம் சிங்களத்தில்அச்சிட்டு வெளியிடுவன யாவற்றையும் தமிழிலும் வெளியிட வேண்டும் என்று சட்ட பிரமாணங்களை நிறைவேற்றிய இந்த அரசாங்கமே தமிழ்மக்களுக்கு தான் கொடுத்த சட்டமூலமான உரிமைகளை மறுப்பதும் புறக்கணிப்பதும் தமிழ் மக்களை அவமதிக்கும் செயலாகும் எனவே மும்மொழிகளிலும் பதிவு சுட்டுத்துண்டு, கடுகதி சுட்டுத்துண்டு என்பவற்றை அச்சிட இப்பொழுது வசதியில்லை எனில் ஆங்கிலத்தின் இடத்தை தமிழுக்குக் கொடுத்து

இச்சுட்டுத்துண்டுகளைச் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன், தேவைப்பட்டால் பாராளுமன்ற வாயிலாக மேல் நடவடிக்கை எடுப்பதற்கு உங்கள் மறுமொழியை விரைவில் எதிர்பார்க்கிறேன்’

இதன் பிரதிகள் திரு. டட்லி சேனநாயக்கா, தபால் மந்திரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

யாழ். நகரில்

## அனாதைச் சிறுவர்களுக்கு இலவச ‘தீபாவளி’ உடை

யாழ்ப்பாணம், திங்கள்

திருநெல்வேலி ஏழைச்சிறுவர் விடுதியிலுள்ள அனாதைப் பிள்ளைகளுக்கென யாழ் நகரிலுள்ளபலவர்த்தகர்கள் நேற்று முன்தினம் பல நூற்றுக்கணக்கான உடுப்புக்களை இலவசமாக வழங்கினார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்ட சைவ நலன்புரிச் சங்க உத்தியோகஸ்தர்களே ஒவ்வொரு கடைக்கும் சென்று உடுப்புகளைச் சேகரித்தார்கள். வடபகுதிவித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், யாழ். ஆஸ்பத்திரி சுப்பிரின்டன், டாக்கர் ரி. சண்முகநாதன், வழக்கறிஞர் எஸ். ஆர். கனகநாயகம் உட்பட பலர் இம்முயற்சியில் இறங்கியுள்ளார்கள்.

மேற்படி ஏழைச் சிறுவர் விடுதி கட்டட நிதிக்காக யாழ்ப்பாணம் நாட்டியாலய மாணவர்களின் நடனவிழாவொன்று இம் மாதம் 8ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (கா. நி)

## 25 இடத்துக்கு 700 பேர்போட்டி

யாழ்ப்பாணம் திங்கள்

25 பொலிஸ் கான்ஸ்டபிள்களைத் தெரிவதற்கான நேர்முகப்பரீட்சைக்கு 700 பேர் தோற்றுகின்றனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. இம் மாதம் 6ம் திகதி வரை நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஆர். சுந்தரலிங்கம் தலைமையிலான குழு நேர்முகப்பரீட்சையை நடாத்துகின்றது. (கா. நி)

‘ஈழநாடு’
அளிக்கும்
தீபாவளி
விருந்து
()

## ‘அரசாங்கத்தின் உதவிகளை விவசாயிகள் பயன்படுத்துவதில்லை’

### மன்னாரில் உணவு அமைச்சர் கவலை

மன்னார், ஞாயிறு

அரசாங்கம் அளிக்கும் உதவிகளைவிவசாயிகள் பயன்படுத்துவதில்லை என மன்னாருக்கு நேற்று விஜயஞ்செய்த உணவு, விவசாய அமைச்சர்

னாரில் அழகிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும் விற்பனவு இலாகாவின் மக்கள் பண்டசாலையை அமைச்சர் திறந்து வைத்தார். பின்னர் 3 லட்சம் ரூபா செலவில் கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், ஞாயிறு

''தமிழர் வாழ்வும் வளமும் கலையோடு இணைந்தது எந்த நிலையில் பார்த்தாலும் எந்தக் கோணத்தில் சிந்தித்தாலும் தமிழரின் கலையுணர்வை அறியலாம் பாடசாலை மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மட்டும் மாறுமல் கலை ரசிகர்களாக கலைஞர்களாக மாற ஆசிரியர்கள் இவ்விழாக்கள் மூலம் வழிகாட்டவேண்டும்.''

இவ்வாறு கிளிநொச்சி காரியாதிகாரி திரு இ யோகநாதன் கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளின் சதம்பவிழாவில் தலைமையுரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார் வட்டாரக் கல்வி அதிகாரி திரு நா துரைச்சாமி தொடக்கவுரை நிகழ்த்த கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு க வைத்தியநாதஐயர்வரவேற்புரை நிகழ்த்திஞர்

31 பாடசாலைகளிலிருந்து ஆரம்ப தெரிவு நடைபெற்று இறுதிவிழாவில் 24 பாடசாலைகள் கலந்துகொண்டன வெற்றிக்கேடயங்கள், கிண்ணங்கள், தராதரப்பத்திரங்களை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செசண்முகநாதன் வழங்கிஞர் கிளிநொச்சி வட்டார தலைமை ஆசிரியர் சங்க செயலாளர் திரு அ க இராசேந்திரம் நன்றியுரை கூறிஞர் நடனங்கள், நாட்டுப்பாடல்கள் நாடகங்கள. வில் லுப் பாட்டு, அபிநயப் பாடல்கள ஆகிய பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளையும் பார்வையாளர்கள கண்டுகளித்துப் பாராட்டினர்

...ஒற்றுமைக்காகப் பாடுபட முன்வரவேண்டும் என்று ஒரு தீர்மானத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்

அகிலபாரத காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தை இந்தமாதம் பிற்பகுதியில் நடத்துவதென்று திருமதி இந்திராகாந்தியின் தலைமையில் கூடிய காரியக்கமிட்டி உறுப்பினர்கள்முடிவுசெய்திருப்பது காங்கிரஸ்கட்சியின் அமைப்புவிதிகளுக்கு முற்றிலும் முரணுகும். காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளால் மட்டுமே இந்தக்கூட்டத்தை நடத்தமுடியும்.

இவ்வாறு திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் இன்று காலையில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் 11 பேரும் ஒரு தீர்மானததில் கூறியிருக்கிருர்கள்.

## எச்சரிக்கை

இந்தமாதம் அழைக்சப்பட்டிருக்கும் கூட்டத்தில் அகிலபாரத காங்கிரஸ்கமிட்டிக்கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது. அப்படிக் கலந்துகொண்டால் கட்சியின் விதிமுறைகளுக்கமைய எடுக்கப்படும். நடவடிக்கைகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

இந்த நடவடிக்கை கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாடுகளை மீறுவதாகும். பிரதமமந்திரி இந்த சடைசிநேரத்திலாவது கட்சியில் ஒற்றுமையை ஏற்படுத்தமுன்வர வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

## ரபாத் மநாடு

ரபாத் மாநாடு முற்றிலும் சமயசார்புடையது. அநத மாநாட்டில்இந்தியா கலந்துகொண்டிருக்கப்படாது நமது மக்களின் சுயமரியாதைக்கு இதுமதிப்பளிப்பதாய் இல்லை என்று திரு. நிஜலிங்கப்பா தலைமையில் கூடியவர்கள் ஒருதீர்மானத்தில் கூறியிருக்கிருர்கள்.

அகிலபாரத காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டுமெனக்கோரி கையெழுத்து சேகரிக்கப் பட்டதையும் அவர்கள் குறைகூறிஞர்கள். இதுபார்ப்போர் பரிகசிக்கக் கூடியதாக விருந்ததென்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தக் கடைசிநேரத்திலாவது பிரதமரும் அவரது சகாக்களும் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காங்கிரஸ்கட்சி வகுப்புவாதப்போக்குக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும், பெங்களூர் தீர்மானத்தின்படி காங்கிரஸ்கட்சியின்பத்தப் சபொருளாதாரக்கொள்கையை அமுல்நடத்தவேண்டுமென்றும் கூறும் தீர்மானங்களையும் அவர்கள் நிறைவேற்றியிருக்கிருர்கள்.

## அஸ்ஸாம் முதல்வர்

நேற்று பிரதமமந்திரியின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்கலந்துகொண்ட அஸ்ஸாம் மாநில முதல்வர் திரு சாலிஹா இன்று திரு. நிஜலிங்கப்பா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டார் கட்சியில் ஒற்றுமையேற்படுவதையே திரு சாலிஹா வற்புறுத்துவதாக திரு சாதிக் அலி நிருபர்களிடம் கூறிஞர்

---

அரசாங்க அச்சக வேலை நிறுத்தத்தின் பின்னர்முதல் தடவையாக அரசாங்க வர்த்தமானி வெளிவந்துள்ளது ஆனுல் அரசாங்க அச்சகத்தைச் சேர்ந்த ஒப்புநோக்குவோர் சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

# '769-ம் இலக்க' ஆட்சேபக் கூட்டத்தில் கூச்சல்

கொழும்பு, சனி

திறைசேரியின் 769-ம் இலக்க சுற்றறிக்கையை ஆட்சேபித்து இன்று கொழும்பு விவேகானந்தாசபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் அரசாங்க சேவை ஊழியர்களின் கூட்டத்தில் சுற்றறிக்கையை உடனடியாக வாபஸ் பெறும்படி நிதி அமைச்சரையும் திறைசேரிக் காரியதரிசி, அரசாங்க பொதுச்சேவைத் தலைவர் முதலியோரையும் கோருவதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பலத்த கூச்சலுக்கிடையே நடைபெற்ற இக்கூட்டத்தில் இரண்டு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அரசாங்கஎழுதுவினைஞர் சங்கத் தலைவரான திரு. கோடீஸ்வரன் கூட்டத்தில் பேச ஆரம்பித்தபோது; பலத்த கூச்சல் போட்டு அவரைப் பேச அனுமதிக்கவேண்டாம் என ஒரு சாரார் கோரினர். பெரும் சப்தங்களுக்கிடையே திரு. கோடீஸ்வரன் பேசிஞர்.

திரு கோடீஸ்வரன் பேசுகையில் சிங்கள சட்டம் சட்டப்புத்தகத்திலிருந்து என்று அகற்றப்படுகிறதோ அன்றுதான் தமிழ்அரசாங்க ஊழியர்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்றும் அரசாங்கஊழியர்கள் சேவையிலிருந்து கொண்டே பயந்து பயந்து போராடுவதிஞல் உரிமைகளைப்பெற்றுவிட முடியாது என்றும் கூறிஞர். தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் அவர்களை ஏமாற்றிவிட்டது என்றும் சொன்ஞர்.

கூட்ட அமைப்பாளர்திரு. திருநாவுக்கரசு பேசுகையில் சிங்கள சட்டத்தை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் சிங்கள நிபந்தனை காரணமாக சிங்களத்தேர்ச்சிபெற முயன்றும் முயலாமலும் கஷ்டப்படுபவர்களுக்கு பயனளிக்கத்தக்க நடவடிக்கைகளை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்காகவே நாம் போராடுகிருேம் இந்தச் சட்டத்தை முற்ருக எதிர்க்கவில்லை என்றும் கூறிஞர்.

திரு. சிகாமணி பேசுகையில் சிங்களச்சட்டம் சரியோ, பிழையோ அரசாங்க சேவையில் இருந்து அதைஎதிர்ப்பதென்ருல்முடியாதகாரியம் பயந்து பயந்து சட்டத்தை எதிர்ப்பதை விடுத்துசேவையிலிருந்துவிலகிப்போராடுவதே சிறந்தது என்ருர். சேவையில் இருக்கும் வரை ஊழியர் ஒவ்வொருவரும் விசுவாசமாகவே இருக்கவேண்டும் என்றும் கூறிஞர்.

சிங்கள சட்டத்தை எதிர்த்து தமிழ்ப்பிரதிநிதிகள் கூச்சல் போடுகிருர்களே ஒழிய சட்டத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகளைப் பெறதமிழ்ப்பிரதிநிதிகள் முயற்சிக்கவில்லைஎன்று திரு. சிகாமணி கூறிஞர் உதாரணமாக இந்தியாவில் இந்தி படிப்பதற்கு காசு ரூபா 15 அரசாங்கம் கூடுதலாக வழங்குவதாக கூறிய அவர் தமிழ் ஊழியர்களுக்கு இவ்விதசலுகைகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக சம்பளம் வெட்டப்படுவதாகக் குற்றஞ்சாட்டிஞர் இதை தமிழ்ப் பிரதிநிதிகள் கவனிக்காததுஏன்என்றும்அவர் கேட்டார்.

சிங்களம் படிககமுயற்சி எடுத்தவர்களையும், எடுககாதவர்களையும் நீககுவதற்கு 769-ம்இலகக சுற்றறிகைகை வழிவகுப்பதால் அது உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும் என்ற தீர்மானம் இறுதியில் நிறைவேற்றப் பட்டது.

— —

## டாக்ஸி-லொறி மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த லொறியொன்றும் டாக்சியும் நேற்று மாலை 6 மணியளவில் அரியாலையில் மாம்பழச் சந்தியில் மோதிக்கொண்டதால் இரு வாகனங்களும் சேதத்துக்குள்ளாகின. இதஞல் இப்பாதையில் சிலமணிநேரம் போக்குவரத்துதடை ஏற்பட்டது. பஸ் பிரயாணிகள் பலர் இந்த இடத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நடந்து வந்ததாகத் தெரிகிறது.

## காந்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் பொது நூல்நிலயத்தில் அமெரிக்கப்பிரிவில் நேற்றுமுன்தினம் தொடக்கம் அடுத்தமாதம் 12-ம்திகதி வரை மகாத்மா காந்தியின் வாழ்க்கைவரலாறு பற்றிய புகைப்படக் கண்காட்யும் மகாத்மா நூல்களின் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ், மாநகரசபையில்

# தமிழில்எழுதப்பட்ட ''செக்'' திருப்பி அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையிலிருந்து தமிழில் எழுதி அனுப்பப்பட்ட 'செக்' ஒன்றை, பேராதனை அரசாங்க தாவரபூந்தோட்ட அத்தியட்சகர், மாநகர சபைக்கே திருப்பி அனுப்பியுள்ளார்.

தமிழில் போதிய தகுதியுடைய உத்தியோகஸ்தர்கள் தமது இலாகாவில் இல்லையென்றும், இதஞல் தமிழில் எழுதப்பட்ட 'செக்'கை மொழிபெயர்க்க முடியாதிருப்பதாகவும் 'செக்'கை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பும்படியும் திருப்பியனுப்பப்பட்ட 'செக்' குடன் இணைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்குத் தேவையான பூங்கன்றுகளைப் பெறுவதற்காக யாழ்ப்பாண மேயரின் உத்தரவின் பேரில் இருபத்திமூன்று ரூபா ஐம்பது சதத்திற்கான குறிப்பிட்ட 'செக்' தமிழில் எழுதப்பட்டுகடந்த மாதம் 27-ம் திகதி பேராதனை அரசாங்க தாவர பூந்தோட்ட அத்தியட்சகருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அந்த 'செக்'கை திருப்பி அனுப்பிய பூந்தோட்ட அத்தியட்சகர் அதனுடன் 30-ம் திகதியிட்டு இணைத்து அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டு 'செக்'கை ஆங்கிலத்தில் அனுப்புமாறு தெரிவித்துள்ளார்.

ஆங்கிலத்தில் அனுப்புவதா அல்லது தமிழிலேயே அனுப்புவதா என்று அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றி மாநகர உத்தியோகஸ்தர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

(கா. நி.)

ஈழநாடு

அளிக்கும்

தீபாவளி

விருந்து

()

மாட்டுவண்டி

சவாரிப்போட்டி

()

கலை விழா

()

விபரம் 4-ம் பக்கம் பார்க்க

## ''உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிப்போம்''

சுழிபுரம், சனி

''எதிர்வரும் தீபாவளிக் கொண்டாட்டத்துக்காக வாங்கப்படும் புதுப்புடவைகள் யாவும் உள்ளூர் உற்பத்தித் துணிகளாகவே இருக்கட்டும். உள்ளூர் துணிகளை வாங்குவதன் மூலம் எமது உற்பத்திக்கு ஊக்கம் கொடுப்பதுடன் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வுக்கு உதவி செய்தவர்கள் ஆவோம்''

இவ்வாறு உள்ளூர் துணிகள் விற்பனையை ஆரம்பித்து வைத்துப் பேசிய சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் பிரசுரிப்பாளர் இலங்கை விஜயம்

கோட்டை, ஞாயிறு

பிரபல பிரிட்டிஷ் புத்தக பிரசுரிப்பாளரைக்கொண்ட வர்த்தக தூதுகோஷ்டியொன்று இலங்கை வந்துள்ளது. குறிப்பாக மாணவர்களின் பாடப்புத்தகங்களின் தேவைகளையும், பொதுவாக இலங்கையின் புத்தகதேவைகளையும் அறிந்து செல்வதே இவர்களது நோக்கமாகும்.

பிரிட்டிஷ் தூதுவராலயத்தின் வர்த்தகப்பிரிவு, பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஒத்துழைப்புடன் இக்குழுவினரின் இலங்கை நிகழ்ச்சி அட்டவணையைத் தயாரித்துள்ளது. சர்வகலாசாலைகளில் பாவிக்கப்பட்டுவரும் விஞ்ஞான,தொழில்நுட்பபாடப் புத்தகங்கள்,ஆங்கிலப் புத்தகங்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவது பற்றி, இங்குள்ள அமைச்சர்களுடனும்,கல்வி அமைச்சு அதிகாரிகளுடனும், சர்வகலாசாலை துணைவேந்தர்களுடனும். ஆசிரியர்களுடனும், நூலக நிர்வாகிகளுடனும் மற்றும்புத்தக வர்த்தகத் துறை பிரதிநிதிகளுடனும் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

# ...விவசாயிகள் பயன்படுத்துவதில்லை'

## மன்ஞரில் உணவு அமைச்சர் கவலை

மன்ஞர், ஞாயிறு

அரசாங்கம் அளிக்கும் உதவிகளைவிவசாயிகள் பயன்படுத்துவதில்லை என மன்ஞருக்கு நேற்று விஜயம்செய்த உணவு,விவசாய அமைச்சர் திரு எம் டி. பண்டா செரிவித்தார். மன்ஞரில் நவீன முறையில் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் செயலகத்தின் புதிய கட்டிடத்தை அமைச்சர் பண்டா திறந்துவைத்துப்பேசிஞர்.

அரசாங்கம்விவசாயிகளுக்குப் பலவிதமான உதவிகளையும் வழங்கி வருவதாகவும்.அவ்வுதவிகளைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் அலட்சியம் காட்டி வருவதாகவும்,விவசாயிகள் அரசாங்கத்திற்குச் சில கடமைகளைச் செய்யவேண்டுமென்றும், இல்லாது போஞல் நமதுநாடு உணவுற்பத்தியில் தன்னிறைவு காண்பது என்றுமே முடியாத காரியமாகிவிடுமென்றும் அமைச்சர் பண்டா பேசுகையில் கூறிஞர்.

மன்ஞர் வந்து சேர்ந்த அமைச்சர் பண்டாவை மன்ஞர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கதிர்காமநாதன் வரவேற்றுப் பேசிஞர்.

மன்ஞர்கச்சேரியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் அமைச்சர் கலந்துகொண்டார். பின்னர் நாஞட்டான் சென்று அங்கு ப கூ.ச.ச. கட்டிடத்திறப்பு வைபவமொன்றில் கலந்துகொண்டார்.அவருடன் அரசாங்கஅதிபர்,ஆட்சிமன்றப் பிரதிநிதி திரு.வி.ஏ. அழகக்கோன் ஆகியோரும் சென்றனர்.

மாலை 5.00 மணிக்கு மன்ஞரில் அழகிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும் விற்பனவு இலாகாவின் மககள் பண்டசாலையை அமைச்சர் திறந்து வைத்தார். பின்னர் 3லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவுச் செயலகத்தைத் திறந்து வைத்துப் பேசிஞர் திரு ஒ கே.செயினுலாப்தீன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மன்ஞர்த்தொகுதி எம். பி. திரு வி ஏ அழகக்கோன் மன்ஞர் பட்டினசபைத்தலைவர் திரு எம் எஸ் ஏ றகீம், திரு ஆர்.ராஜரத்தினம்,அரசாங்க அதிபர் திரு கதிர்காமநாதன், உப ஆணையாளர் திரு ஆர் நடராஜா,கே பி திஸநாயகா மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். பெருந்திரலான பொதுமக்கள் வைபவத்தில் கலந்துகொண்டார்கள்.

விவசாய மன்னஞள உயிலங்குளத்தைச் சேர்ந்த ரி சந்திரசேகரனுக்கு, ஏக்கருக்கு 210 புசல் விளைவித்ததற்கான பரிசிலை அமைச்சர் வழங்கிஞர் மற்றும் 14 மன்னர்களுக்கும் பல பரிசில்கள் வழங்கப்பட்டன.

கூட்டுறவுச் செயலகத்தில் ஒரு அரங்கமண்டபத்தைக் யும் கட்டும் எண்ணம் இருப்பதாகவும் பொதுமக்க்ள் ஒத்துழைத்தால் வெகு சீக்கிரம் அந்த அரங்கமண்டபத்தைக் கட்டிமுடிக்கலாம் என்றும் கூட்டுறவு உப ஆணையாளர் திரு ஆர் பி ராஜகுரு ஒரு திட்டத்தை வெளியிட்டார் அரசாங்க அதிபர் அதற்கு ஆசி கூறி சகல நடவடிக்கைகளும் எடுப்பதாகச் சொன்ஞர்.

# குருநகர் வீடமைப்புத் திட்ட வீடுகளைப்பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், திங்கள்

குருநகரிலுள்ள வீடமைப்புத்திட்ட வீடுகளை சுகாதாரப் பகுதியினர் பார்வையிட்டனர். இங்குள்ள மலகூடங்களை திருத்தியமைக்கவும், அசுத்தத்தை அகற்றவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியில் சுகாதார வசதியின்மையும், இடநெருக்கடியும் ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள மாநகர சபைக்காணிகளை குருநகர் வாசிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென குருநகர் வட்டார அங்கத்தவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகத்தால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவே சுகாதாரப் பகுதியினர் இப்பகுதிகளைப் பார்வையிட்டனர்.

மாநகர சபைச் சுகாதாரக் குழுத் தலைவர் திரு. கே. வி. தெய்வேந்திரம். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராசா ஆகியோர் வட்டார அங்கத்தவர் திரு. எம். எஸ். பேரின்பநாயகத்துடன் சென்று இவைகளைப் பார்வையிட்டனர்.

குருநகர் பகுதியில் வாளிக்கக்கூசுகள் விரைவில் அகற்றப்படலாம் என்றும் சுகாதாரப்பகுதி உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
கன்னித்தாய்

வி ன் ஸ ர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம் ஜி ஆர்-பத்மினி
நடித்த
அரசிளங்குமரி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி, 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
மு க ரா சி

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 pm
Jack Nicholson
in
TERROR
(color-Scope)

REGAL JAFFNA
Daily 4 Shows
Anthony Quinn,
Claudia Cardinale
in
LOST COMMAND
(Adults)

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30,
சுந்தரராஜன் - பத்மினி
பேபிராணி
நடித்த
குழந்தைக்காக


ரா ஜா — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம்
காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, நாகேஷ்
நடித்த
டீச்சரம்மா

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் 3-வது வாரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்சிகள்




# யாழ் உதைபந்தாட்டச் சங்க நிர்வாகிகள் தெரிவு

## திரு. என். எஸ்தாக்கி புதிய தலைவர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், யாழ். மாநகரசபை பொழுதுபோக்குக் கழக மண்டபத்தில், உப தலைவர் திரு. என். தேவபாலன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியதும் சென்றவருடக்கூட்டறிக்கையைக் காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியம் வாசித்ததும் புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு ஆரம்பமாகியது.

புதிய தலைவர் தெரிவுக்காக வண பிதா ரி ஏ ஜே மருதநாயகம், புறக்டர் அன்ரனி ஆகியோரின்பெயர்கள் பிரேரிக்கப்பட்டபோது வண பிதா மருதநாயகம் தாம் இப்பதவிக்குப் போட்டியிட விரும்பவில்லை எனக் கூறியதும், ஆசிரியர் திரு என் எஸ தாககியின்பெயர் பிரேரிக்கப்பட்டுபின்வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது திரு என் எஸ் தாக்கிக்கு 32 வாக்குகளும், புறக்டர் அன்ரனிக்கு 22 வாக்குகளும் கிடைத்தன. ஆசிரியர் திரு என் எஸ் தாக்கி 10 அதிகப்படியானவாக்குகளால் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய தலைவர் திரு என் எஸ் தாக்கி தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. கூட்டத்துக்குச் சமுகம்கொடுத்த சில கழகங்களின் பிரதிநிதிகள் ஆரம்பத்தில் கூட்டமண்டபத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். பின் வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: வண பிதா ரி ஏ ஜே மருதநாயகம், உப போஷகர்கள்: அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீற்றர்ஸ் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம். யாழ். மேயர் திரு சி நாகர்ராசா, யாழ். மாவட்ட நீதிபதி ஜனுப் எம் ஜமீல், டாக்டர் துரைசிங்கம், டாக்டர் கே கனகரத்தினம். தலைவர்: திரு என் எஸ் தாக்கி (நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை தலைமை ஆசிரியர்) உப தலைவர்கள் திருவாளர்கள் பி எப் சேவியர், என் தேவபாலன், ஈ கே குமரையா, எஸ் ஜே வீரசிங்கம், ஏ அலக்ஸீஸ், அரசாங்க சேவைப் பிரதிநிதி ஒருவர். காரியதரிசி திரு ந பாலசுப்பிரமணியம் (சென்ற வருட காரியதரிசி), உப-காரியதரிசி: திரு. ஏ ஜோசப், தனாதிகாரி: திரு என். சண்முகநாதன் (யாழ்வாணன்), நிர்வாகக்குழுவினர்: சென் அன்ரனிஸ் கழகம், கிறீன்பீல்ட் கழகம், யாழ் றேஞ்சர்ஸ் கழகம், கிருஸ்கோப்பாஸ் கழகம், வல்வெட்டி யுனைட்டட்கழகம், வைக்கிங்ஸ் கழகம், புனிதவளன் கழகம், சென் ஜோசப்கழகம், சென் ஜேம்ஸ் கழகம், யுத் லீக் த. கிறைஸ்தகிங் கழகம், கா ர நகர் கடற்படை ஆயுள்கால அங்கத்தவர் திரு ஈ பிளேவியன். கணக்குப் பரிசோதகர்: திரு. ஆர். இரத்தினராசா. (தே. நி)

## சைக்கிள் திருட முயன்றாராம்

பருத்தித்துறை ஞாயிறு

இறைச்சிக்கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த கடைக்காரரின் சைக்கிள் ஒன்றை எடுத்துக்கொண்டு கிளம்ப முனைந்தஒரு மேனாட்டுடை வாலிபன் கையும் மெய்யுமாக பிடிபட்ட சம்பவம் நெல்லியடியில் நடைபெற்றது. அது தனது சைக்கிள் தானென்று வாதாட முனைந்த அவ் வாலிபன்சனக் கூட்டம்தன்னைச்சுற்றிவளைத்ததும் உண்மையைக் கக்க வேண்டியேற்பட்டதாம்உடனடியாக அவ்வாலிபர்பருத்தித்துறை பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## நால்வர் போட்டியிடார்

கோட்டை, ஞாயிறு

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்களில் நால்வர் எதிர்வரும்பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் எனக்கூறப்படுகிறது.

இவ்வமைச்சர்கள் தங்கள் கட்சியிலுள்ள இளம் அங்கத்தவர்களுக்கு சலுகை அளித்து அவர்களைப் படிப்படியாகத் தலைமைப் பதவிகளை ஏற்கச் செய்வதற்காகவே தாங்கள் தேர்தலில் போட்டியிடவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அறிவித்துள்ளார்கள்.

மேற்படி நாலு அமைச்சர்களில் இருவர் அரசியலிருந்துஓய்வு பெறப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## எம். பி. போட்டி

மாவனல்லை, ஞாயிறு

கடுகண்ணவை நகர சபை தேர்தலில் உடுநுவரை எம். பி. திரு. திரு. அனில் ஏ. அபயசுந்தரா போட்டியிடுகின்றார். இத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் கடுகண்ணவை நகர சபை மண்டபத்தில் கண்டி தேர்தல் அதிகாரி முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்டன.

ஆறு தொகுதிகளைக் கொண்ட இத்தேர்தலில் யு. என். பி சார்பில் நால்வரும், சுதந்திரகட்சி சார்பில் 6 பேரும், சுயேட்சையாக 4 பேரும் போட்டியிடுகின்றனர்.


## யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி 1970

யாழ்ப்பாண பொதுசன நூலக வளவிலுள்ள சயிக்கிள் பாதுகாக்குமிடத்தில் 1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை வாடகை வசூலிப்பது சம்பந்தமான உரிமையைக் கேள்விகள் மூலம் குத்தகைக்குக் கொடுப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் போடுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரப் பணமாகரூபா 5/- ஐயும். கேள்வி வைப்புப்பணமாகரூபா 25/- ஐயும் செலுத்தியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் 11-11-69-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விகளின் முடிவு திகதி 12-11-69 புதன் கிழமை பி. ப. 4-00 மணியாகும்.

இதர விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
மா. ந. அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-10-69. 1811


## மதகு சீர்கேடு

யாழ்ப்பாணம், திங்கள்

சுழிபுரம் ஐந்தாம் வட்டாரத்திலுள்ள நெல்லியான் சந்தி மதகு மிகவும் சீர்கேடான நிலையிலுள்ளது. மழைகாலத்தில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இப்பகுதிமக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

கடந்த பல காலமாகஇந்த மதகு திருத்தப்படாமல் சீர்கேடான நிலையிலிருப்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலதடவை புகார் செய்தும்எவ்விதபயனும் கிடைக்கவில்லையாம். இதனால் இவ் வட்டார மக்கள் பெருத்த அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.


## யாழ்ப்பாண மாநகரசபை ஏலவிற்பனை

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய வளவிலுள்ள சைக்கிள் பாதுகாக்குமிடத்தில் 6-11-69 தொடக்கம் 31-12-69 வரை வாடகை வசூலிப்பது சம்பந்தமான உரிமை பிரசித்த ஏல விற்பனை மூலம் 5-11-69 திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு பொதுசன நூல்நிலையத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் முழுப்பணத்தையும் ஏலவிற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் உடன் செலுத்திக் கொள்ளவேண்டும்.

ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2-11-69. 1812


## 'உடனடியாகத் தடைசெய்க'

இரத்தினபுரி, ஞாயிறு

சிங்கள இனத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் 'நாம் தமிழர்' இயக்கத்தைப் பிரதமர் பூரணமாகத் தடைசெய்யவேண்டும் என்றதொரு தீர்மானம் குக்குலுகோரளையிலுள்ள மேடற்பற்று என்னும் பகுதியின் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளையின் பொதுக்கூட்டமொன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேடபற்று தலைவர் திரு. ஜே. ஆர். அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சி. ஜயக்கொடி மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்

தீர்மானத்தைக் கொண்டு வந்த் திரு. ஜயக்கொடி பேசுகையில் சிங்கள இனத்தவரின் நலன்களைப்பாதிக்கும் 'நாம் தமிழர்' இயக்கத்தைச் சாதாரணமாக நினைக்கக்கூடாதெனவும் இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை உடனடியாகக் கவனித்து அதைப்பிரதமர் தடைசெய்யவேண்டுமெனக்குறிப்பிட்டார்.


## வரிவிளம்பரம்

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 1517

### விற்பனைக்கு

காணி

ஒவ்வொன்றும் இரண்டு பரப்பாகவுள்ள, கட்டடங்களுக்கான காணித்துண்டுகள் நல்லூர் கிழக்கு வைமன் வீதியில் விற்பனைக்குண்டு. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கருகாமையில், குடியிருப்புப் பகுதியில் வீதிக்கு முன்னால் இக் காணிகள் உண்டு. ஒரு பரப்பு ரூபா 16,000/- விண்ணப்பிக்கவும்: தர்மலிங்கம், 41, கண்டி வீதி சுண்டிக்குளி அல்லது புரக்டர் சுப்பிரமணியம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1518


ஐ. தே. கட்சி

## 45 வட்டாரங்களில் போட்டியிடும்

கோட்டை, ஞாயிறு

எதிர்வரும் கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிட ஐக்கியதேசியக்கட்சி 45 அங்கத்தவர்களை தெரிவுசெய்துள்ளது. இப்பொழுது மாநகரசபையிலுள்ள ஜனுப் ஃலீல் ஏ. கபூர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்களும் திரும்பவும் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. 47 வட்டாரங்களைக்கொண்ட மேற்படி மாநகரசபையின் இரு வட்டாரங்களுக்கே ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களை நிறுத்தவில்லை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 3—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக் கநற்சிந்தனை, 7-15 ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ ரவிச்சந்திரன்,
★ பத்மினி,
★ நாகேஷ்,
★ குமாரிசச்சு,

மற்றும் பலர் நடித்த

# எங்களுக்கும் காலம் வரும்

கதைவசனம்: பாசுமணி | டைரக்ஷன்: வின்ஸன்ட் | பாடல்கள்: கண்ணதாசன்-வாலி

**ஞாயிறு 3—11—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணை, 7-35 பேச்சு, 7-45 ஐக்கிய நாடுகள் சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

0231

# ஏ. எப். ரேமண்ட்ஸ்


ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.


147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ எப் ரேமண்ட்ஸ்




ஓர் 14 அவு. யானை மார்க் ஒரேஞ் பார்லி போத்தல் உங்களுக்கு, நுரை பொங்கும் துல்லியமான 3 'கிளாஸ்', அதி தெம்பூட்டும் சுவை மிகுந்த, இன்றைய குளிர்பானச் சந்தையிலே எவராலும் பெறுதற்கரிய, அதி தூய்மையான உன்னத தர பானத்தை, இனிமையாக அளிக்கிறது. தாகத் தணிவுக்கு, அன்று முதல்—இன்று வரை—இல்லங்கள் அனைத்திலும் இப்பானம் அருந்தப் படுதற்குக் காரணம், இதுவே.

எலிபன்ட் ஹவுஸாரின்
ஓர் உயர்தர உற்பத்தி

# உங்களுக்கு சரியான சேவை

GRANT631259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாத இறுதிக்குள்

# அ. இ. காங்கிரஸ்கமிட்டி கூட்டம் நடத்த இந்திரா குழுவினர் முடிவு

## நிஜலிங்கப்பாவை அகற்றும் தீர்மானம் நிறைவேற்றுவர்?

புதுடில்லி, நவம்பர் 2

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் தலைமையில நேற்றுக் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை இம்மாதம் 23-ம் திகதி வாக்கில் அழைப்பதென்று முடிவுசெய்தனர்.

ஆனால் திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை அழைக்கும் கோரிக்கை ஒழுங்கற்றது எனக் கூறிக் கண்டித்தது.

பிரதம மந்திரியின் தலைமையில் கூடியவர்கள் நடத்தவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திரு. நிஜலிங்கப்பாவைப் பதவியிலிருந்து விலக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றுப் போலவே இன்றும் இரு தரப்பினரும் தனித்தனியே கூட்டம் நடத்தினர்கள்

திரு. சுப்பிரமணியத்தையும், திரு. பக்ருதீன் அலி அகமத்தையும் காரியக் கமிட்டி அங்கத்துவப் பதவியிலிருந்து திரு, நிஜலிங்கப்பா நீக்கியதைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற காரியக்கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென்று முடிவுசெய்த திருமதி காந்தியும் அவரது சகாக்களும் தனியாகக் கூட்டம் நடத்தினர்கள்.

என்றாலும் அவர்களின் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியை விரைவில் கூட்ட வேண்டுமென்று கோரும் கோரிக்கை காரியக்கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டும் என்ற கோரிக்கை ஒழுங்கற்றது என்று திரு. நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய அங்கத்தவர்கள் தீர்மானித்தார்கள்

## பலப்பரீட்சை உச்சக்கட்டம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டுவதற்கு திருமதி காந்தி கோஷ்டியினர் செய்திருக்கும் முடிவு சின்டிகேட் சார்பானவர்களுக்குத் தர்மசங்கடமான ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் காங்கிரஸ் கட்சியை எவ்வாறு பாதிக்கும் என்பதை இனிமேல்தான் பொறுத்துப் பார்க்கவேண்டுமென்று அவதானிகள் கூறுகிறார்கள்

## கேரளத்தில் நிலச் சீர்திருத்தம்

திருவனந்தபுரம், நவ. 2

கேரளத்தில் நிலச்சீர்திருத்தத் திட்டங்கள் தீவிரமாக அமுல்நடத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. அச்சுத மேனன் கூறியிருக்கிறார்.

— —

## குடும்பத்திட்ட சொற்பொழிவும் படக் காட்சியும்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை குடும்பத் திட்டத் தகவல் பிரிவு அதிகாரிகளான திரு அண்டன் குணசேகராவும், திருமதி யோகா பாலச்சந்திரனும் தீவுப்பகுதிகளில் கடந்த எட்டுத்தினங்களாக நடாத்திய கருத்தரங்குகள் படக்காட்சிகளுக்கு பெருந்திரளான மக்கள் சமூகமளித்தனர். நேற்று மாலை திருநெல்வேலி வாலையம்மன் ஆலய முன்றலில் குடும்பக் கட்டுப்பாட்டு

## டாக்கா குழப்பத்தில் 6 பேர் பலியாகினர்

டாக்கா, நவ. 2

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் கலவரத்தில் ஈடுபட்ட கும்பலைக் கலைப்பதற்கு இராணுவத்தினர் தடிகளால் அடித்தும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் பெருமுயற்சி செய்தனர். பாதையில் தடைகளைப் போட்டுத் தீயிடுவதிலும், குழப்பம் செய்வதிலும் கும்பல் ஈடுபட்டது.

குழப்பத்தை அடக்கப் பொலிஸார் சுட்டதில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும், 70 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. வங்காளி பேசுகிறவர்களுக்கும், உருது பேசுகிறவர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சமூக விரோத சக்திகள் குழப்பங்களில் ஈடுபட்டதாக அதிகாரிகள் அறிவித்தனர். பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தபின்னர் ஏற்பட்ட மிக மோசமான குழப்பம் இதுவென்று கூறப்படுகிறது.

குழப்பம் நடந்த பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. குழப்பங்களில் ஈடுபடுகிறவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் ஸ்தலத்திலேயே சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுவாசப்பை போன்று மூச்சுவிடும் இரப்பர்சவ்வு

கொழும்பு, ஞாயிறு

மனித உடலில் காணப்படும் நுரையீரல் இழைமம் போன்ற அமைபும், அதன் தன்மைகளும் கொண்ட ஸிலிகோன் இரப்பர் சவ்வொன்று லண்டனில் உருவாக்கப் பட்டிருக்கிறது. வைத்தியர்களும், பொறியியலாளர்களும் பல்லாண்டுகாலமாகச்செய்த இடைவிடா ஆராய்ச்சிகளின் பலனாக இந்த இரப்பர் சவ்வுஅமைக்கப்பட்டிருக்கிறது. வைத்திய கைத்தொழில் துறையில் பல புரட்சிகரமான மாற்றங்களை இது கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.


வழக்கமாக, ஒருவருக்கு நீண்ட நேர சத்திரசிகிச்சை செய்கையில், அவசியம் ஏற்படும் பொழுது செயற்கை இருதயம் ... கப்படுகிறது. ... செயற்கைக்கூடானது, இரத்தக்கிலுள்ள ... நுரைச்சவ்வு, செலவு மிக்கதாகவும் அதே சமயம் இரத்தோட்டத்திற்குகேற்ப துரிதமாகச்செயற்பட முடியாததாகவும் இருந்தது.

இப்புதிய இரப்பர் சவ்வு, இக்குறைகளையெல்லாப் நீக்கி விட்டது. இது ஓர் அங்குலத்தின் .0002 அளவுமெல்லியது. வாயுக்களையும் காற்றுப் போன்றவற்றையும் வெகு துரிதமாகவும், இலகுவாகவும் போக விடும். கட்டிப்பொருள், உயிரணுக்கள் அல்லது உயிர்ப்பொருட்களை இச்சவ்வுஉட்செல்லவிடாது. அத்துடன் இச்செயற்கை இரப்பர் சவ்வை அமைப்பதற்கான செலவும மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

— —

## மடாலயம் நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்



அண்மையில் சமாதானப்பட்டம் பெற்ற தொல்புரம் வாசியான திரு.சோ. நரசிங்கத்தின் பாராட்டு விழாவின்போது, திரு. நரசிங்கமும் பாரியாரும் இல்லத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்படுகையில் ஆலத்தி எடுக்கிறார்கள்.

## விஷஜுரம் பரவுகிறது

கோட்டை, ஞாயிறு

தெகிவளை, கல்ஹிஸை ஆகிய ஆடங்களுக்கு அருகாமையில் உள்ள இடங்களிலும்நெருப்புக்காச்சல் தீவிரமாகப்பரவ ஆரம்பித்துள்ளது.

மொறட்டுவை, வெள்ளவத்தை, கோட்டை ஆகிய ஆடங்களில் நெருப்புக்காச்சல் காணப்படுவதாகசௌக்கிய இலாகா தெரிவித்துள்ளது. இந்நோய் முதல் முதல் தொடங்கிய தெஹிவளை, கல்ஹிஸை பகுதிகளில் தேவையான தடுப்புமுறைகளைக் கையாண்டுள்ளதாகஇலாகா மேலும் தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய 26,000 பேருக்குத் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டுள்ளதாயும், இத்தடுப்புமருந்தைப் பெருந்மக்கள் தாமததுன்றி அதைப் பெற்றுக்கொண்டால் இந்நோயைப் பரவாமல் தடுக்கலாம் என சௌக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பொருட்காட்சி

சுழிபுரம், ஞாயிறு

சங்கானை மேற்கு கைப்பணிப் பயிற்சிக் கழகத்தினரின் பொருட்காட்சியை வடபகுதி கைத்தொழில் உதவி அதிகாரி திரு. எஸ். கந்தவனம் நேற்றுக்காலை திறந்து வைத்தார். பொருட்காட்சி விற்பனையை அடுத்து செல்வி க. சரவணமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பலபிரமுகர்களின் சொற்பொழிவும், இன்னிசை விருந்தும் நடைபெற்றன.

— —

## தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

சுழிபுரம், ஞாயிறு

வடபகுதியிலுள்ள சகல கூட்டுறவு வங்கிகளிலும் நகைஅடைவுபிடிப்பதை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளனர். ஆரம்ப இருப்பு நகைஅடைவுகணக்கு பார்ப்பதைத் தொடர்ந்தே தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## செய்திச் சுருக்கம்

### விவசாயிகளுக்கு உதவி

அண்மையில் பரவலாகப் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட வடபகுதி விவசாயிகளுக்கு விதைநெல் அல்லது நாற்றுநடுகை கடன் வசதி வழங்குவது பற்றிவிவசா.. அமைச்சு கலந்தாலோசித்துவருகிறது. இதுகுறித்து விவசாய மேற்பார்வையாளர்களும், மாவட்டக் காரியாதிகாரிகளும் விவசாய அமைச்சுடன் தொடர்புகொண்டு விதைநெல் அல்லது நாற்று நடுகைக்குக் கடன் வசதி வழங்கும்படி ஆலோசனை கூறியுள்ளனர்.

0 0

### விசேட புகையிரதசேவை

தீபாவளித் திருநாளையொட்டி வருகிற 9-ம் திகதி விசேட புகையிரத சேவை ஒன்றை புகையிரத இலாகா நடத்தவுள்ளது. அன்று அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைத் தினமாகக் கொள்ளப்படுவதுடன் மறுதினம் 10-ந் திகதியும் மேலதிக விடுமுறைத்தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 8,9,10-ந் திகதிகளில் அதிகாலை 'உத்தரதேவி' காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும். 6,7-ம் திகதிகளில் வாங்கப்படும் போய்வரக் கூடிய பிரயாணச்சீட்டுகள் 10-ம் திகதிவரை செல்லுபடியாகும்.

0 0

### இறங்குதுறைகள்

துறைநீலாவணை, அன்னமலை ஆகிய இடங்களிலுள்ள துறைகளில் இயந்திரப்படகுகளை சேவைக்கு விடுவதற்கு ஏற்ற வகையில் துறைகளின் இரு கரைகளிலும் இறங்குதுறைகள் அமைக்கப் படவுள்ளன. இந்தவேலைகளை ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச்சபையின் கல்லோயா அபிவிருத்தித் திட்டப்பிரிவு பொறுப்பேற்று செய்துமுடிக்க இருப்பதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சகட்டம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டுவதற்கு திருமதி காந்தி கோஷ்டியினர் செய்திருக்கும் முடிவு சிண்டிகேட் சார்பானவர்களுக்குத் தர்மசங்கடமான ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

அ. இ. காங்கிரஸ் கமிட்டியிலுள்ள பெரும்பான்மையான அங்கத்தவர்கள் திருமதி இந்திரா குழுவின் கோரிக்கைக்கு ஆதரவாக கையெழுத்திட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் பெரும்பாலானவர்கள் திருமதி காந்தியின் கோரிக்கைக்கு இணங்கி அவர்கள் அழைத்துள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடும். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் காங்கிரஸ் கட்சியை எவ்வாறு பாதிக்கும் என்பதை இனிமேல்தான் பொறுத்துப் பார்க்கவேண்டுமென்று அவதானிகள் கூறுகிருர்கள்

### ஜயப்பிரகாஷ் கருத்து

காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படுவது நாட்டுக்கே நன்மையளிக்குமென்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் கருத்து வெளியிட்டிருக்கிருர். காங்கிரஸ் கட்சியில் தீவிரமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

சேகராவும், திருமதி யோகா பாலச்சந்திரனும் தீவுப்பகுதிகளில் கடந்த எட்டுத்தினங்களாக நடாத்திய கருத்தரங்குகள் படக்காட்சிகளுக்கு பெருந்திரளான மக்கள் சமூகமளித்தனர். நேற்று மாலை திருநெல்வேலி வாலையம்மன் ஆலய முன்றலில் குடும்பக் கட்டுப்பாட்டு சொற்பொழிவும் படக்காட்சியும் காண்பிக்கப்பட்டன.

மேலும் பல இடங்களில் குடும்பநலத்திட்டக் கருத்தரங்குகளை நடாத்துமாறு சனசமூக நிலையங்களும் பொது நிறுவனங்களும் வேண்டுகோள் விடுத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமாக, ஒருவருக்கு நீண்ட நேர சத்திரசிகிச்சை செய்கையில், அவசியம் ஏற்படும் பொழுது செயற்கை இருதய, சுவாசக்கூடு இணைக்கப்படுகிறது. அச்சமயம் செயற்கைக்கூடானது, இரத்தத்திலுள்ள கரியமில வான்யுவ உள்ளெடுத்து, பிராணவாயுவை அளிக்கிறது. சுவாசப்பை இழைமத்தின் வழக்கமான "மூச்சு" விடும் வேலையை இக்கூடு செய்கிறது.

இம்மூச்சுவிடும் வேலையை செயற்கைக்கூட்டில் ஒருவித சவ்வே செய்கின்றது. இது காறும் பாவிக்கப்பட்ட செய அத்துடன் இச்செயற்கை இரப்பர் சவ்வை அமைப்பதற்கான செலவும மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

### மடாலயம் நிறுவ முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

சைவசமய அடியார்கள் ஜெபம், தியானம், யோகம் செய்வதற்கும், மாணவர்கள் சமயகல்வி கற்பதற்கும் கோப்பாய் வடக்கில் மாணிக்கசுவாமிகள் மடாலயம் என்ற பெயரில் ஒரு மடாலயத்தை நிறுவ அடியார்கள் சிலர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

...கிறது.

பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடதாசி உடைக்கு பிரிட்டனில் கிராக்கி

லண்டன், நவ. 2

இன்று புதிதாகப் போடும் உடையை நாளை வீசி விடலாம் என்று துணிந்து கூறுகின்றனர் ஒரு பிரிட்டிஷ் கம்பனியினர். கடதாசியாலான உடைகளை இவர்கள் அமைக்கின்றனர். அவற்றிற்கு இப்பொழுது எங்கும் ஒரே கிராக்கி!

இளம் சிறுர் முதல் பெரியோர்வரை இவ்வுடைகளைப் பயமின்றி அணியலாம். இப்புரட்சிகரமான உடை, இன்று நேற்று அறிமுகப்படுத்தப்பட்டதல்ல. சில ஆண்டுகளுக்கு முன் இவ்வுடை இதே கம்பனியால் அமைக்கப்பட்டு, சந்தையில் விற்பனைக்கு வந்தபோது, அதைச் சீண்டுவார் இருக்கவில்லை. கடதாசி உடையை அச்சமயம் பெரியதொரு வேடிக்கையாக மக்கள் கருதினர். அதற்கொருகாரணம் சாதாரண நீண்ட காலம் பாவிக்கக்கூடிய உடையின் விலையிலும் பார்க்க இக்கடதாசி உடையின் விலை மிகக் கூடியதாக இருந்ததே.

ஆனுல் கடதாசி உடை அமைப்புத்துறை இப்பொழுது தீவிரமாக முன்னேறி வருகிறது. இவ்வுடையின்கணக்கிலடங்காநன்மைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டி, பிரபலப்படுத்தியது பயன்தரத் தொடங்கியிருக்கிறது. கடதாசி உடையென்றுல் ஏதோ சாதாரண பேப்பரை எடுத்து வெட்டித் தைக்கப்பட்டதுஎனஎண்ணி விடாதீர்கள். உண்மையில் கடதாசிதான் இவ்வுடைக்குப் பாவிக்கப்பட்டாலும், இது சாதாரண கடதாசியல்ல. நைலோன் அல்லது ரேயன் மூலம் உறுதி செய்யப்பட்ட கடதாசிஇது!

லண்டனிலுள்ள "டிஸ் போலியர்" என்ற கம்பனிதான் இவ்வுடையை, பல ரகங்களில் பலவைபவங்களுக்கு ஏற்றவண்ணம் அமைத்து வருகிறது.

# 'அரபுத்தலைவர்கள் கூட வேண்டும்' ஜோர்டான்மன்னர் வற்புறுத்துகிருர்

அம்மான், நவம்பர் 2

இஸ்ரேலுக்கு எதிராக ஒருமுகமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றி ஆலோசிக்க அரபுத் தலைவர்கள் கூடிப்பேச வேண்டும் என்று ஜோர்டான் மன்னர் மீண்டும் யோசனை கூறியிருக்கிருர்.

ஜோர்டான் ஆட்சிமன்றத்தில் பேசிய மன்னர் ஹுசேன், இஸ்ரேல் அமெரிக்காவின் உதவியுடன் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் ஜோர்டான் தனது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவரும் என்றும் குறிப்பிட்டார்.

## லெபனுன் சமரச முயற்சி தொடர்கிறது

லெபனுனில் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள் சம்பந்தமாக சமரசம் ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து கெய்ரோவில் நடைபெற்று வருகின்றன.

லெபனுன் அதிபர் திரு. ஹேலேயின் உத்தரவின் பேரில் லெபனுன் வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் கோஷ்டியொன்றும் கெய்ரோவுக்கு விஜயம் செய்துள்ளது. ஏற்கனவே லெபனுன் இராணுவத் தளபதி ஜெனரல் புஸ்தானி கெய்ரோவில் அதிபர் நாஸரோடும் இதர அதிகாரிகளோடும் ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

அரபுக் கொமாண்டோ ஸ்தாபனத்தின் தலைவர் அரபாட் கெய்ரோ வந்திருக்கிருர். அவர் ஜெனரல் புஸ்தானியைச் சந்திப்பாரா இல்லையா என்பது தெரியவில்லை.

### சிரியா மறுப்பு

லெபனுன் எல்லையில் சிரியா படைகளைக் குவித்து வருவதாக லெபனுன் குற்றஞ்சாட்டியிருக்கின்றது. ஆனுல் இதை சிரியா மறுத்திருக்கின்றது. லெபனுனில் கொமாண்டோக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் தொடர்ந்து மோதல் நடைபெறுகின்றது. திரிபோலி நகருக்கு வடக்கே பலத்த மோதல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

### இஸ்ரேலுக்கு பிரிட்டன் புத்திமதி

நட்பு நாடுகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கும்படி இஸ்ரேலுக்கு பிரிட்டன் புத்திமதி கூறியிருக்கின்றது. இஸ்ரேலை இதர நாடுகள் அங்கீகரிக்கவேண்டுமானுல் நட்புநாடுகளின் யோசனைகளையும் அதுகேட்டு நடந்துகொள்ள முன்வரவேண்டும் என்று இஸ்ரேலுக்கு இப்பொழுது விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் மந்திரி திரு. தொம்சன் கூறியிருக்கிருர். 1967-ல் பாதுகாப்புச்சபை மேற்காசியா சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானம் அமுல்நடத்தப்படவேண்டும் என்றும்அவர் வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

## இன்று செனட் தலைவர் தெரிவு

கோட்டை, திங்கள்

செனட்சபையின் புதிய தலைவரை அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து எதிர்க் கட்சியினர் இன்று தெரிவு செய்யவுள்ளனர். செனட்சபைசரித்திரத்தில் இப்படி நடப்பது இதுவே முதல்தடவையாகும். செனட்சபைத் தலைவராக செனட்டர் திரு ஏ. ரத்னநாயகாவின் பெயரை அரசாங்கக் கட்சி செனட்டர் பிரேரிக்க எதிர்க்கட்சி செனட்டர் ஆமோதிப்பார்.

## மலேரியா தடுப்பு மகாநாடு

கோட்டை, ஞாயிறு

உலக சௌக்கிய நிறுவனத்தின் ஆதரவோடு இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் 19-ம் திகதி வரை கொழும்பில் மலேரியா பற்றிய ஆராய்ச்சி மகாநாடு நாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

இம்மகா நாட்டுக்கான ஆயத்தங்களை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. இம்மகாநாட்டில் இலங்கை உட்பட 6 தென் கிழக்காசிய நாடுகள் பங்குபற்றுகின்றன. சுகாதார அமைச்சர் திரு. இ. எல். சேனநாயக்காவினுல் ஆரம்பித்துவைக்கப்படும் இம் மகாநாட்டில் உலக சௌக்கிய நிறுவனத்தின் பிரதேச அதிபர் டாக்டர் வி. ரி. ஹெரத் குணரத்ன பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார்.

## கல்கமுவவில் தமிழ் விழா

கல்கமுவ, ஞாயிறு

நீர்ப்பாசன பயிற்சியாளர் தமிழ் கலாமன்றத்தினர் இம்மாதம் 30-ம் திகதி தமிழ் விழா ஒன்றைநடாத்துகின்றனர். இந்த விழாவையொட்டி 'தமிழருவி' என்ற சஞ்சிகையொன்றையும் வெளியிடவிருக்கின்றனர்.

ஈழத்தின் சிறந்த பேச்சாளர்களையும், கலைஞர்களையும் இவ்விழாவில்கலந்துகொள்ள அழைத்துள்ளனர்.

கலாசாலை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் மன்றத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- திரு. ந. ஸ்ரீசந்திரமோகன், உபதலைவர்: ந பாலேந்திரா, செயலாளர்: த. கோபாலகிருஷ்ணன், உபசெயலாளர்:- ம. திருஞானசம்பந்தன், பொருளாளர்:- வி. விஜயகாந்தன்.

10 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.


சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ·605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரூ. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரூ. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரூ. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பெரும்பான்மையினரின் கருத்துக்களை சிறுபான்மையினர் மீது திணிப்பது முறையல்ல. சிறுபான்மையினருடன் அச்சமின்றி விளக்கிப் பேசி அவர்களையும் தங்கள்பக்கம் கவர முயற்சிசெய்யவேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 18-ந் திகதி (3-11-69)


## இந்திய காங்கிரஸ் பிளவு

இந்திய ஆளும் கட்சியான அகில இந்திய காங்கிரஸில் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் காங்கிரஸ் அக்ராசனர் திரு. நிஜலிங்கப்பா மற்றும் 'சின்டிகேட்' எனப்படும் 'பெருந்தலைவர்களுக்குமிடையில் ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகரைத் தெரிவுசெய்வதில் மோதல் ஆரம்பித்து வங்கிகளைத் தேசியமயமாக்குவதில் அது பெரிதாகி பின்னர் ''அப்படியும் இப்படியும்'' சமாதானம் என்ற முயற்சியினால் சரிக்கட்டி பிளவைச் சீராக்க எடுத்த நடவடிக்கைகள் யாவும் பயனற்று இப்போது பலப்பரீட்சை உச்சக் கட்டத்துக்கு வந்திருக்கிறது. இந்தப் பலப்பரீட்சையின் முடிவு எப்படியிருக்கும். இதனால் யாருக்கு நன்மை?

திலகர், காந்தி, நேரு போன்ற பெரியார்கள் கட்டி வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ். நாட்டுமக்களை ஒன்று சேர்த்து அரும் பெரும் போராட்டங்கள் நடத்தி பல தியாகங்கள் செய்து நாட்டுக்கு விடுதலை தேடிக் கொடுத்ததும் காங்கிரஸ் தான் நாடு விடுதலைபெற்ற பின் நேரு என்ற சக்தி காங்கிரசைக் காப்பாற்றிவந்தது. நேருவின் காலத்திலேயே காங்கிரசுக்குள் கருத்துவேறுபாடுகள் இருந்தன. எந்த அரசியல்கட்சியிலும் தலைவர்களுக்கிடையில் கருத்துவேறுபாடு ஏற்படுவதுஇயற்கையே. கருத்து வேற்றுமைகள் பெரும் பிளவாக உருவெடுத்து கட்சிக்கும் ஆட்சிக்கும் ஆபத்து ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. ஆனால் இந்திய காங்கிரஸில் இப்போது ஏற்பட்டிருந்பது இதுதான். பிரதமர் பதவியிலிருந்து திருமதி இந்திராவை அகற்றிவிட்டு தமக்கேற்ற ஒருவரை அப்பதவியிலமர்த்துவதற்கு நிஜலிங்கப்பா, காமராஜர் ஆகியோருட்பட 'சின்டிகேட்' குழுவினர் முயற்சிசெய்து வருகின்றனர். இதற்குப் பொருள் கொள்வதற்கு அருகதையில்லையெனக்கூறி அக்ராசனர் தடைசெய்தார். இதன்விளைவாக திருமதி இந்திராவும் அவரது ஆதரவாளர்களும் செயற்குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரித்து தனியாகக் கூட்டம் நடத்தினர். நிஜலிங்கப்பா தலைமையில் ஒரு கூட்டமும் இந்திரா தலைமையில் ஒரு கூட்டமும் நடந்திருக்கிறது. அதாவது காங்கிரஸ்கட்சி இப்போதே இரண்டாகப் பிரிந்துவிட்டது என்பதை இது வெளிவெளியாகக் காட்டியிருக்கிறது.

இப்போதும்கூட இருதரப்பினரையும் சமாதானப் படுத்தும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் இப்படியொரு முயற்சி நடைபெற்று 'ஐக்கிய' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது சொல்லளவில் தான் இருந்தது, செயலில் ஐக்கியம் ஏற்படவில்லை. அதன் விளைவுதான் இப்போதைய சம்பவம் ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரான சஞ்சீவரெட்டியை ஆதரித்தவர்களும் ஆதரித்த ராஜ்யங்களும்கூட அதன்பின் திருமதி இந்திராவின் முற்போக்குத் திட்டங்களையே ஆதரிக்கின்றன. காங்கிரசல்லாத கட்சிகள் ஆட்சிபீடத்திலுள்ள ராஜ்யங்களும் திருமதி இந்திராவையே ஆதரிக்கின்றன. மொத்தத்தில் ஒருசிலரைத் தவிர இந்தியமக்கள் அனைவரும் பிரதமர் இந்திராவை ஆதரிக்கின்றனர், இந்நிலையில் காங்கிரஸ் பெருந் தலைவர்கள் எனப்படும் 'சின்டிகேட்' குழுவினர், பெருந்தன்மையுடன் நடந்துகொள்வது அவர்களுக்கும் காங்கிரசுக்கும் நாட்டுக்கும்கூட நல்லது.

காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு அந்த ஸ்தாபனத்தைக் கட்டி வளர்த்தவர்களின் ஆத்மாவுக்கு அமைதியின்மையை ஏற்படுத்துவதைவிட காந்திஜி கூறியதுபோல் இப்போதாவது காங்கிரசைக் கலைத்துவிடு

# 'தமிழினத்தின் உரிமைக்காக உயிர் துறக்கவும் தயார்'

## பண்டாரவன்னியன் விழாவில் வவனியா எம். பி.

முல்லைத்தீவு, ஞாயிறு

பண்டாரவன்னியன் விழா நேற்று முன்தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை 8 மணியளவில் வவனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரம், பண்டாரவன்னியன் கழகத் தலைவர் முல்லைமணி திரு வே. சுப்பிரமணியம், வவனியா வடக்குப் பிரிவுக்காரியாதிகாரி மற்றும் கிராம சபைத் தலைவர்கள் ஆகியோரின் தலைமையில் சென்ற மக்கள் வெள்ளம் கற்சிலைமடுவிலுள்ள மாவீரன் பண்டாரவன்னியன் கற்சிலைக்கு மலர் சார்த்தி அஞ்சலி செய்தனர். நேற்றுப் பிற்பகல் 3 மணிக்குத் தண்ணீரூற்றில் அமைக்கப்பட்டுள்ள பண்டாரவன்னியன் படிப்பகத்தை வவனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரம் திறந்துவைத்தார். இதைத்தொடர்ந்து மாலை 5-30 மணியளவில் முல்லைத்தீவுப் பட்டின சபை மண்டபத்திலிருந்து மறைந்த மாவீரனின் உருவப் படம் மேளவாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டது வானம் கறுத்து மழைமாரி பொழிந்துகொண்டு இருந்ததையும் பொருட்படுத்தாமல் மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்ட மாவீரனின் படம் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தை அடைந்ததும் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவிகள் கொடிக்கீதப் பாட மங்கள இசை முழங்க மக்கள் கரகோஷம் செய்ய பண்டாரவன்னியனின் வாள் பொறித்த கொடியை ஏற்றிவைத்தார்

இதன்பின் மழைகாரணமாக திறந்தவெளியரங்கில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முல்லைத்தீவுப் பட்டினசபையின் உபதலைவர் திரு. ஏ. வி. அருளப்பு தலைமையில் ஆரம்பமானது.

முதல் நிகழ்ச்சியாக முல்லைத்தீவுப் பிரிவுக்காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன் குத்துவிளக்கேற்றிவைத்தார். தொடர்ந்து பண்டாரவன்னியன் கழகத் தலைவர் முல்லைமணி வே சுப்பிரமணியம வரவேற்புரை நிகழ்த்தினார். இடையில் கிராமசபைத் தலைவர்கள், வவனியா நகராண்மைக்கழகத்தலைவர், ஊர்காவற்றுறை எம். பி, திரு. வ நவரத்தினம், காரியாதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் வவனியா எம். பி. ஆகியோர் வீற்றிருந்தனர்

இதைத்தொடர்ந்து பாடசாலை மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன

கவிஞர் இ நாகராஜன் தலைமையில் நடந்த கவியரங்கில் கவிஞர்களான முருகசூரியன், அரியான் பொய்கை திலீபன் ச தில்லையம்பலம் திருமதி புவன ஐயம்பிள்ளை வி சண்முகம் ஆகியோர் பண்டாரவன்னியனைப் பற்றியும் வன்னி ராச்சியம் பற்றியும் கவிகள் பாடினர் இதையடுத்து உரையரங்கு ஆரம்பமானது

தீவுப்பகுதி எம். பி. திரு வ நவரத்தினம் பேசுகையில், '1956-ம் ஆண்டில் தாம் தமிழரசுக்கட்சியில் இருந்தபோது திருமலை நோக்கிச் சென்ற பாதயாத்திரீகர்களை முல்லைத்தீவு மக்கள் உணவும் தங்கும் வசதியும் அளித்து உதவியதாகவும், இன்று நானும் வவனியா எம். பி. யும் வேறுபட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். 1803ல் இப்பகுதியில் சுதந்திரதாகமிருந்திருக்கின்றது. மாவீரன் பண்டாரவன்னியன் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து வன்னி நாட்டுக்காக, தமிழ் நாட்டுக்காக, தன் பின் சந்ததியினருக்காகத் தன் உயிரையே விட்டான். ஆனால் நாம் இன்று சிங்கள சகோதரருடன் போராடும் காலம் தமிழ் இனத்தை ஒழிக்கும் பொருட்டு தங்கள் இஷ்டப்படியெல்லாம் சட்டங்களை இயற்றி எமது மொழியுரிமையைப் பாதித்தனர். படிப்படியாக எம்மை அழித்தொழிக்கத் திட்டமிட்டுள்ளனர். எனவே சுதந்திரதாகமும் வீரமும் ஒருங்கே அமைந்த பண்டாரவன்னியனின் வழிவந்த நாம் தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராட வேண்டும்'' என திரு. நவரத்தினம் எம். பி. சொன்னார்.

சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு ஆகிய பகுதிகள் சிங்கள மயமாக்கப்பட்டு விட்டன. சிங்களத்தைக் கற்பதால் தமிழ் ஊழியர்கட்கு எவ்வித பயனுமில்லை காரணம் சிங்கள வாலிபர்கள் ஆயிரக்கணக்கில் வேலையின்றி இருக்கின்றனர். இந்த நேரத்தில் அரைகுறை சிங்களம் படிக்கும் எமது ஊழியர்களுக்கோ. வேலையற்றவர்களுக்கோ உத்தியோகம் 'கிடையாது என அவர் மேலும் சொன்னார்.

வவனியா எம். பி.யும் பண்டாரவன்னியன் கழகப் போஷகருமான திரு. தா சிவசிதம்பரம் பேசுகையில் வன்னி மக்கள் வீரம் தெரிந்தவர்கள் என்றும், மற்றவர்களுக்கு அடிவருடி வாழாதவர்கள் என்றும் உண்டேல் சுதந்திரம் இன்றேல் இல்லை வாழ்வு' என்ற புனிதக் கொள்கையைப் பற்றும் நாம் பண்டாரவன்னியனுக்கு விழா எடுப்பது சாலப்பொருந்தும் என்றும் இன்று நமது தமிழினம் நசுக்கப்பட்டு உரிமைகள் இழந்து நிற்பதாயும், ஆட்சியாளர் எமது உரிமைகளைத் தர மறுத்தால் நேரடியாகப் போராடி எமது உரிமையைப் பெறத் தமது உயிரையே தியாகம் செய்யத் தயார் என்றும் சொன்னார். மற்றும் பலரும் பேசினர். பண்டாரவன்னியன் நாடகமும் நடைபெற்றது.

## ரஷ்ய அணு ரகசியம்

மாஸ்கோ, நவ. 2

சோவியத் யூனியன் முதல் தடவையாக, அணுக்குண்டு சோதனை பற்றிய தகவல்களை வெளியிட்டிருக்கின்றது இதுவரைக்கும் ரஷ்யா இவ்வாறு அணுசோதனை பற்றிய விஷயங்களை வெளியிட்டதில்லை.

அமெரிக்காவுடனும் மற்றைய நாடுகளுடனும் அணு ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதாகவும சோவியத்யூனியன் தெரிவித்திருக்கின்றது

## சந்திரமுத்திரை

புதுடில்லி நவ. 2

மனிதன் சந்திரனில் காலடி வைத்துவிட்டுத் திரும்பியதைக் கொண்டாடும் விதத்தில் இந்திய தபால் இலாகா இம்மாதம் முற்பகுதியில் தபால் முத்திரையொன்றை வெளியிடவிருக்கின்றது. சந்திரனில் மனிதன் இறங்குவதை சித்தரிக்கும் படம் பொறிக்கப்பட்ட இந்த முத்திரை 20 பைசாபெறுமதியானதாகும்.

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் விசேட பொதுக் கூட்டமொன்று இம்மாதம் 6.ம் தேதி பிற்பகல் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் மின்சாரத் தகராறு சம்பந்தமாக மாநகர ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையையிட்டு ஆலோசிக்கப் படும்.

ஆசிரியருக்குக்கடிதம்

## கட்டாக்காலிகளால் விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை முஸ்லிம்பகுதி, ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள விவசாயிகள் பெரிதும் துயருற்றுள்ளனர். கட்டாக்காலிகளின் தொல்லையே இவர்கள் கவலைக்குக் காரணமாகும்.

இரவும் பகலுமாகக் கட்டாக்காலி மாடுகள்பயிர்களை அழித்துவருவதால் இப்பகுதி வயல் சொந்தக்காரர்கள் நஷ்டமடைந்துள்ளனர். சில கமக்காரர்கள் கட்டாக்காலிகளின் தொல்லையை நினைத்து பயிர்செய்யாமல் தமது நிலங்களைக் கட்டாந்தரையாகவே விட்டுவிட்டனர்.

இதனால் ஊர்சுற்றித் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் இத்தொழிலைக் கைவிட்டுவிட்டார்களோ என எண்ணத்தோன்றுகிறது.

இவ்வட்டாரங்களுக் குரிய மாநகரசபை வட்டார உறுப்பினர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவார்களா.

முத்தையா

யாழ்ப்பாணம்.

## மழையினால் மக்கள் அவதி

முசலி, ஞாயிறு

கடந்த சில தினங்களாகப் பெய்த பெரு மழையின் காரணத்தால் சிலாவத்துறை, மறுச்சுக்கட்டி, முள்ளிக்குளம், அரிப்பு, வேப்பங்குளம் போன்ற பகுதிகளில் பஸ் போக்கு வரத்தும், நடைப்பாதையும் தடை செய்யப்பட்டுள்ளன.

மேற்கூறிய இடங்களை மறித்து ''அரிவியாறு'' பாய்வதால் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அரிவியாற்றில் கடந்த சில தினங்களாகப் பத்தடிக்கு மேல் நீர் பாய்ந்தது. இதன் காரணமாக முசலிப் பகுதியில் வாழும் மக்கள் தங்களின் அன்றாட உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முருங்கனுக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது.

## இறக்குமதி வேலை துரிதம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்திருக்கிருக்கும் அரிசிக் கப்பல் இறக்குமதி வேலைமிகவும் துரிதமாக நடைபெற்றுவருகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்திற்குவந்த 'றுதாண்ட' என்னும் அரிசிக் கப்பல் சுமார் 9000 தொன் நிறையுடன் இங்கு வந்திருந்தது. ஐந்து நாட்களிலும் சராசரி நாளொன்றுக்கு 1000 தொன் இறக்குமதி செய்துள்ளதாக உணவு இலாகா அதிகாரி ஒருவர் கூறியுள்ளார், இக்கப்பல் வேலையை செய்துவரும் யாழ். மாவட்ட துறைமுகத் தொழிலாளர் சமாஜம் இன்னும் இரு நாட்களில் கப்பல் இறக்குமதிவேலையை முடித்து விடுமெனத்தெரிய வருகிறது.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 18-ந் திகதி (3-11-69)

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். சிலருக்கு வெளியூர் பயணத்திற்கு இடமேற்படும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், உற்சாகமானதினம்.

**ரிஷபம்-** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலிலும் விருத்தியுண்டு. உடன் பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். தகுதியிலும் உயர்வுக்கு இடம்உண்டு.

**மிதுனம்-** தடைகளின் தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கும். நம்பிக்கையின் மூலம் பொருள் விரயமாகலாம். சிலர் வாழ்க்கையில் திருடர்பயத்துக்கும் இடமுண்டு.

**கடகம்-** நலிவுதரும் சம்பவங்கள் இடம்பெறும் பொதுவாக நாவடக்கம் விரும்பத்தக்கது. திடீர்முடிவுகள் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்தும். அவசர

## 'ஈழநாடு' அளிக்கும் தீபாவளி விருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூடாது. ஆனால் இந்திய காங்கிரஸில் இப்போது ஏற்பட்டிருந்பது இதுதான். பிரதமர் பதவியிலிருந்து திருமதி இந்திராவை அகற்றிவிட்டு தமக்கேற்ற ஒருவரை அப்பதவியிலமர்த்துவதற்கு நிஜலிங்கப்பா, காமராஜர் ஆகியோருட்பட 'சின்டிகேட்' குழுவினர் முயற்சிசெய்து வருகின்றனர். இதற்குப் போட்டியாக காங்கிரஸ் அக்ராசனர் பதவியிலிருந்து நிஜலிங்கப்பாவை அகற்றுவதுடன் ஆட்சி அதிகாரத்தில் இருந்து 'சின்டிகேட்' ஆதரவாளர்களையும் அகற்றி களையெடுப்பதற்கு திருமதி இந்திராவும் அவரது ஆதரவாளர்களும் தயாராகிவிட்டனர். நேற்றுமுன்தினம் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றபோது அத்தக் கூட்டத்தில் இந்திராவின் ஆதரவாளர்களான திரு சி. சுப்பிரமணியம், பக்ருதீன் அலி அஹ்மத் ஆகியோர் கலந்து

வது அவர்களுக்கும் காங்கிரசுக்கும் நாட்டுக்கும்கூட நல்லது.

காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு அந்த ஸ்தாபனத்தைக் கட்டி வளர்த்தவர்களின் ஆத்மாவுக்கு அமைதியின்மையை ஏற்படுத்துவதைவிட காந்திஜி கூறியதுபோல் இப்போதாவது காங்கிரசைக் கலைத்துவிடுவதே விவேகம்?

காங்கிரஸ் தகராறும் அதன் விவகாரமும் காங்கிரஸ்காரர்களுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தப்பட்ட விஷயமானலும் ஆசியாவிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்கும். இந்தியாவில் கட்சிப்பூசல்களால் ஜனநாயகத்துக்கு ஏறபடக்கூடிய ஆபத்து ஆசியாவில் ஜனநாயக வாழ்க்கை முறையைப் பின்பற்றும் இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகளுக்கும் தாக்கம் ஏற்படுத்தக்கூடும்

லைத்தீவுப் பட்டினசபையின் உபதலைவர் திரு ஏ. வி.

டுக்காக, தன் பின் சந்ததியினருக்காகத் தன் உயி

தமது உயிரையே தியாகம் கையையிட்டு ஆலோசிக்கப் செய்யத் தயார் என்றும் படும்.

# 'ஈழநாடு' அளிக்கும் தீபாவளி விருந்து

# மாட்டுவண்டி சவாரிபோட்டி; புதுமை சிந்தும் கலைவிழா நெருங்குகிறது

(ஈ. கே. ராஜகோபால்)

**தீபாவளித் திருநாளில் யாழ்நகரில் நடக்கவிருக்கும் 'ஈழநாடு'விழாவுக்கான ஏற்பாடுகளை விழாஅமைப்பாளர்கள் துரிதமாகச் செய்துகொண்டிருக்கின்றனர் குறுகியகால எல்லைக்குள்ளேயே விழாவை நடத்தத் திட்டமிட்டபோதிலும் விழா பெருவிழாவாக அமைந்திடும் வண்ணம் ஏற்பாடுகள் சிறப்புற அமைந்துள்ளன.**

தீபாவளித் திருநாளை மக்கள் நல்லமுறையில் கழிக்க வேண்டுமென்ற நல்நோக்குடன் இவ்விழாவுக்கு வடபகுதிப் பொலிசார் தமது பூரண ஒத்துழைப்பையும் நல்க முன்வந்துள்ளனர். அருமையான பொழுதை மக்கள் அமைதியாகக் கழிக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் இப்போதிருந்தே தமது உதவியையும் ஒத்துழைப்பையும் அளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

மாட்டுவண்டிச்சவாரிப்போட்டியென்றால் எல்லோருக்கும் ஒரே குதூகலம்தான்! மனதுக்கினிய மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடக்கப்போகும் தினத்தை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். மூலைமுடுக்குகளிலெல்லாம் ஈழநாடு விழாவைப்பற்றியும் அங்கு நடக்கப்போகும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பற்றியும் பேசிக்கொண்டிருப்பது காதுகளில் விழாமலுமில்லை

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் கலந்துகொண்டு பரிசுகளை தட்டிக்கொள்வதற்கு தமது சவாரி மாடுகளை இப்பொதே தட்டிக்கொடுத்து தயாராக்கி விட்டார்கள். இன்னும் ஆறேஆறு நாட்கள்தான் இருக்கின்றன... மின்னலெனப் பாய்ந்தோடப் போகும் தமது சவாரி மாடுகளுக்கு பயிற்சி அளிக்கத்தொடங்கி விட்டார்கள். யாழ். கோட்டை மைதானமும் தீபாவளித் திருநாளான மாலை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடாத்தவும் ஆயிரக்கணக்கான மக்களைத் தாங்கிக் கொள்ளவும் தயாராகிவிட்டது.

## புதுமை! புதுமை!!

அன்றிரவு யாழ் திறந்தவெளியரங்கில் நடக்கவிருக்கும் பிரமாண்டமான கலைவிழா புதுமை விழாவாக அமையப்போகிறது என்று கூடச் சொல்லலாம். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கப்போகும் இந்தக் கலைவிழாவில் என்னென்ன நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன என்று அறியத்துடிக்கிறீர்கள்! கொஞ்சம் பொறுங்கள்......

முற்றிலும் பெண்களே நடிக்கும் புதுமை நிறைந்த நாடகம். அனுபவம் வாய்ந்த கலைஞர்கள் இதனை அளிக்கிறார்கள்.

காற்றிலே மிதப்பதுபோன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தப்போகும் மெல்லிசை! நீங்களே உங்களை மறந்து புதிய உலகொன்றில் சஞ்சரிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தப் போகிறது.!!

உள்ளங்களைச் சொக்கவைக்கப்போகும் மெல்லியரின் நாட்டியமும் பார்த்துவிட்டு நிச்சயம் பார்க்கக் கண்கோடி வேண்டும் என்று சொல்லத்தான் போகிறீர்கள்.

நகைச்சுவை — ஈழத்தில் தலைசிறந்த நகைச்சுவைக் கலைஞரின் கோஷ்டியினர் சிரித்துச் சிரித்து சிந்திக்க வைக்க அருமையானதொரு நகைச்சுவை நிகழ்ச்சியை அளிக்கிறார்கள்........... நேரில் நீங்கள் எல்லாம் பார்க்கத்தானே போகின்றீர்கள்......

கலைவிழா சம்பந்தமான முழுவிபரங்களும் நாளை வெளியாகும்,

மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும். 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இருபிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு இந்தப்போட்டி நடைபெறும். **(விண்ணப்பப்பத்திரத்தில் பங்குபற்றும் பிரிவு எனக்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில்'ஏ' அல்லது 'பி' எனக்குறிப்பிடுக)**

### அமைப்பாளர்

'ஈழநாடு' ஆதரவுடன் இந்த மாபெரும் விழாவுக்கான ஒழுங்குகளை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டென்ட்திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ்.மெட்டல்இன்டஸ்றீஸ் திரு. ஆர். ஆர். ராஜலிங்கம், தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.எஸ்.மாணிக்கம்,ஸ்டீல்சன்ஸ் அதிபர்திரு எம்.பூபாலசிங்கம், யாழ்மாநகரசபை என்ஜினியர்திரு ஈ. வைத்திலிங்கம், சமூகசேவைப்பகுதிஅதிகாரி திரு என் சிவசிதம்பரம், 'ஈழநாடு'ஸ்தாபனத்தைச்சேர்ந்த திரு.எஸ். எம். கோபாலரத்தினம் ஆகியோர் கவனித்துவருகின்றனர்.

யானை பீடிக்கம்பனி அதிபரான செனட்டர் ரி. நீதிராஜா மாட்டுவண்டிச் சவாரியில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசில்களை வழங்க முன்வந்துள்ளார். போட்டிவிழா பற்றிய முழுவிபரங்கள் விண்ணப்பப்பத்திரத்துடன்தொடர்ந்து ஈழநாட்டில் வெளிவரும்.

## மாணவர் சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய விஞ்ஞான மாணவர் கழகத்தைச்சேர்ந்த பதினைந்து மாணவர் நான்குதின வடபகுதி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச்சென்று இவர்கள் பார்வையிட்டனர். 'ஈழநாடு' காரியாலயத்துக்கும்விஜயம் செய்து பத்திரிகை அச்சாகும் முறைகளை ஒவ்வொரு பகுதியாக பார்வையிட்டனர். ஆசிரியர்கள் திரு. த. அரியரத்தினம், திரு வைரவப்பிள்ளை ஆகியோர் மாணவர்களுக்கு பொறுப்பாக இருந்தனர். நாளை பாடசாலை போய்ச்சேர்வர்.

கிடைக்கும். செய்தொழிலிலும் விருத்தியுண்டு. உடன்பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். தகுதியிலும் உயர்வுக்கு இடம்உண்டு.

**மிதுனம்-** தடைகளின் தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கும். நம்பிக்கையின் மூலம் பொருள் விரயமாகலாம். சிலர் வாழ்க்கையில் திருடர்பயத்துக்கும் இடமுண்டு.

**கடகம்-** நலிவுதரும் சம்பவங்கள் இடம்பெறும் பொதுவாக நாவடக்கம் விரும்பத்தக்கது. திடீர்முடிவுகள் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்தும். அவசரபுத்தியின் மூலம் ஆபத்தும் ஏற்படலாம்.

**சிம்மம்-** மேடைப்பேச்சாளர்களும், நடிகர்களும் பெரும்புகழ்அடைவார்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு. இல்லத்தில் திருப்திகரமான நிலைதென்படும். அந்தஸ்திலும் முன்னேற்றம்உண்டு.

**கன்னி-** அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசரமுடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும். தொழிலும் தடைகள் உண்டு.

**துலாம்-** திடீர்திருப்பங்கள் ஏற்படும். ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவைகள் இலகுவில் முடிவடையும். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழுரை கிடைக்கும். திருப்தியான தினம்.

**விருச்சிகம்-** பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாணமுடியும். குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும். மகிழ்ச்சிகரமானதினம்.

**தனுசு-** ஆணவப்போக்கினல் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டலாம். பிள்ளை ஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். பொறுமைநன்று.

**மகரம்-** கவர்ச்சிகரமானதினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும். களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும். செல்வாக்கு மேலும் சிறப்படைவதற்கும் இடமுண்டு.

**கும்பம்-** விபத்துக்கு இடம் ஏற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்துசொள்ளவும். பலவழிகளிலும் பணம் செலவாகும். சிலர் கடன்படவும் நேரிடலாம் எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

**மீனம்-** எண்ணிய கருமத்தில் இன்று வெற்றிஉண்டு. புண்ணியவெற்றிகளில் பொருட்செலவும் ஏற்படும். கண்ணியமான நடவடிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம். வரவேற்கத்தக்கதினம்.

**மாட்டுவண்டிச் சவாரியில் கலந்துகொள்பவர்கள் கீழுள்ள விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து இம்மாதம் 6-ம் திகதிமாலை 4 மணிக்கு முன்னர் திரு எஸ். மாணிக்கம் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர், பொலிஸ் நிலையம்,யாழ்ப்பாணம் அல்லதுபோட்டி அமைப்பாளர், 'ஈழநாடு' த. பெ இல. 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**

போட்டியில் பங்குபற்றக்கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன் இப்போட்டியில் பங்குபற்றுவதனல் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன் எனக்கேற்படக்கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டி நிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அவர்களிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எதுவித நஷ்ட ஈடும் கோரமாட்டேன் என்றும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பை எவ்விதஆட்சேபனையுமின்றி ஏற்றுக் கொள்வேனென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர்: ....................................

....................................................

பங்குபற்றும் பிரிவு:.........................................

விலாசம்: ..................................................

..................................................

வயது: ...............................................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை எனஉறுதிப்படுத்துகிறேன்.

................ ........................................

திகதி போட்டியாளரின் கையொப்பம்

பதுளை மாநகரசபை தேர்தல்

## மூன்று தமிழர் உட்பட 33 பேர் போட்டி

பதுளை, ஞாயிறு

பதுளை மநகரசபைதேர்தலில் 3 தமிழர்களும், ஐந்து முஸ்லிம்களும் உட்பட 33 பேர் போட்டியிடுகின்றனர். இத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் பதுளைக் கச்சேரியில்தேர்தல் அதிகாரி ஜனுப் ஜிப்றியினல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 15 வட்டாரங்களைக் கொண்ட இந்த மாநகர சபைத் தேர்தலில் ஒரு பெண்மணியும், போட்டியிடுகிறார்

ஐக்கியதேசியக்கட்சிச்சார்பில் 14 பேரும், சுதந்திரக் கட்சிச் சார்பில் 4 பேரும், சமசமாஜக்கட்சி சார்பில் 8 பேரும், கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் ஒருவரும், சுயேச்சையாக அறுவரும் போட்டியிடுகின்றனர்.

1-ம் வட்டாரம்: ஏ மர்லிங்கொட (யூ என் பி) வை எம் பி உக்குபண்டா (சு க)

2-ம் வட்டாரம்: கே குமாரவேல் (சுயேச்சை) பி கருணதிலகா (யூ என் பி) எம் எம் பொடி அப்புஹாமி (சமசமாஜ)

3-ம் வட்டாரம்; பி பி ராஜபக்ஸ (சு க) என் ஏ பிரேமரத்தின (சுயேச்சை)

4-ம் வட்டாரம்: காமினி வீரசேகரா (யூ என் பி) ஜி பி குணசேகரா (சு க)

5-ம் வட்டாரம்: டி வீரக்கோன் (யூ என் பி) பேர்ஸி விஜயக்கோன் (சு க)

6-ம் வட்டாரம்: ஆர் கருணரத்ன (யூ என் பி) எம் இரத்திநயக்கா (சமசமாஜ)

7 ம் வட்டாரம்: எம் அப்துல்லா சாஹிப் (யூ என் பி) இஸட் ஆப்தின் (சமசமாஜ)

8-ம் வட்டாரம்: ஏ ஆர் எம் அப்துல்காதர் (யூ என் பி) எஸ் திஸநாயக்கா (சமசமாஜ)

9-ம வட்டாரம் எஸ்.பாலசுப்பிரமணியம் சின்னையா (சுயேச்சை தியூடர்சில்வா (யு என் பி)

10-ம் வட்டாரம் ஏ. தட்சணமூர்த்தி (சுயேச்சை) எம் எம் கியாஸ் (யு என் பி)

11-ம்வட்டாரம் டி டயஸ் (யு என் பி) கே எம் பீர்முகமது (சமசமாஜி)

12-ம் வட்டாரம் சிறிபால கஜநாயகா (யு என் பி) ஏ டபிள்யு சொய்சா (சமசமாஜி வில்லியம்சிங்கோ (சுயேச்சை)

13-ம் வட்டாரம் எச் கஜநாயகா (யு என் பி) ஜே டி ஆரியரத்ன (சமசமாஜி) எச் பி இரத்னயக்கா (சுயேச்சை)

14-ம் வட்டாரம் ஏ இரத்னயக்கா (யு என் பி) பி டபிள்யு சில்வா (சமசமாஜி)

15-ம் வட்டாரம் செல்வி எல் எம் பெரேரா (யு என் பி) பி இரத்னயக்கா (கம்யூனிஸ்ட்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேலை 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org